**ARTICLE 03 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00014**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 11–14
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# நவீன தமிழ் இலக்கிய மரபை உடைத்தெரியும் தென் மாவட்டப் படைப்பாளர்கள்

**இம்மானுவேல் செ[1,*], முனைவர் கலாகோபி க[2]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி., India

[2]இணைப்பேராசிரியர் , தமிழ்த்துறை ,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில்., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** இம்மானுவேல் செ — kkalagopi77@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

ஐரோப்பியர்களின் வருகை இந்தியச், தமிழ்ச் சமூகத்தில் மிகப்பெரிய மாற்றங்களைக் கண்டது போல, தமிழ் இலக்கிய ரீதியாகவும் பல புதிய பரிணாமங்களை கொண்டுள்ளது. அந்த வகையில் நாவல், சிறுகதை, நாடகம், புதுக்கவிதை, இலக்கியத் திறனாய்வு என்ற பல்வேறு விதமான நவீன இலக்கிய கூறுகளை உள்ளடக்கியதான போக்கினை தமிழ் இலக்கிய பயணத்தில் நாம் காணமுடிகின்றது. இதன் ஒரு முகமாக தலித் இலக்கியத்தின் ஆரம்பகால வளர்நிலை, அதன் மீது எழும் விமர்சனத்தை மையமாக கொண்டு இவ்விமர்சனத்திற்கு தென்மாவட்டப் படைப்பாளிகள், இலக்கிய திறனாய்வாளர்கள் பங்களிப்பு குறித்து ஆராய்வதை நோக்கமாக கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords / திறவுச் சொற்கள்:** விதைகள்- கடலை விதை- வற்றல் விதை -பருத்தி விதை- உரம்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** செ, இ., & க, மு. க. (2026). நவீன தமிழ் இலக்கிய மரபை உடைத்தெரியும் தென் மாவட்டப் படைப்பாளர்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## தலித் இலக்கியம்

ஆங்கிலேயரின் வருகை அவர்கள் அரசியல் ரீதியாக ஏற்படுத்திய சமூக, சமய சீர்த்திருத்தங்கள் இந்தியச் சமூகக் கட்டமைப்பில் மிகப்பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தியது. இதன் விளைவாக இலக்கியத் தளத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. மகாராஷ்டிரா மாநிலத்தில் உருவான ஒடுக்கப்பட்டோர் இலக்கியம் சாதியக் கட்டுமானத்திலான சமூகக் கட்டமைப்பிற்கு எதிரான, புரட்சிக்கரமான, எதிர்மறுப்பு வாதங்களை கொண்டதாக தலித் இலக்கியம் தோன்றியது. இவ்வாறு உருவான தலித் இலக்கியம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் விரிந்து எல்லா இந்திய மொழிகளிலும் தலித் இலக்கியம் வேகமாக வளர்ந்து வந்ததை நாம் அறிய முடிகின்றது. இச்சூழலில் '**1990-ல்** இந்தியாவெங்கும் பேரதிசயம்போல் கொண்டாடப்பட்ட அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவைத் தான் 'தலித் இலக்கியம்' தமிழகத்தில் அறிமுகமான காலம் என்று சொல்ல முடியும்"1 என்கிறார் பேரா.டி.தர்மராஜ்.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

‘தலித் என்பவர் யார் என்பதற்கு தாழ்த்தப்பட்வர்கள், மலைவாழ்மக்கள், புதிய பௌத்தர்கள், உழைக்கும் மக்கள், நில மற்றவர்கள், ஏழை விவசாயிகள், பெண்கள், அரசியல் ரீதியாகவும் மதத்தின் பெயராலும் சுரண்டப்படும் அனைவருமே தலித்துக்கள் தான்”2 என்று **கெயில் ஓம்வெத்** வரையறை செய்கிறார்.

ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கான குறியீடாக தலித்தியம் தமிழகத்தில் நுழைந்தது. ஆனால் சில தலித்திய அறிவு ஜீவிகள் என்று சொல்லக்கூடியவர்களால் அது அட்டவணைச் சாதியினரை மட்டுமே கணக்கில் கொண்டு அழைக்கப்படுகின்ற ஒரு சாதியப் பெயராக மாற்றப்பட்டதை நாம் அறிய முடிகிறது.

பரந்த பாரத தேசம் முழுவதும் அரசியல், சமூக, பொருளாதார, பாலீன ரீதியாக பாதிக்கப்பட்டோரை குறிப்பதற்காக உருவாக்கப்பட்ட ‘தலித்’ என்ற சொல், தமிழகத்தில் தலித், தலித் இலக்கியம் என்றும் அது அட்டவணைச் சாதியினரின் விடுதலை என்ற நிலையில் இருந்து, அது அட்டவணைச் சாதியிலே இருக்கக்கூடிய ஒரு சாதியினருக்கான அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்கான சொல்லாக மாற்றக்கூடிய சூழலில், அதற்கு எதிரான விமர்சனங்கள் தமிழ் இலக்கிய, இயக்க ரீதியாக முன்னெடுக்கப்பட்டது என்றாலும், இங்கு கருத்தரங்கு தலைப்பிற்கேற்ப தென்மாவட்ட தமிழ் இலக்கியப் படைப்புகள், விமர்சனங்கள், திறனாய்வு என்று இருப்பதனால் தலித் இலக்கிய விமர்சனங்களைத் தென் மாவட்ட அளவில் மட்டுமே இங்கு இனங்காணப்படுகின்றது. நவீன தமிழ் இலக்கிய படைப்பாளர்களான பூமணி, ரோ.டி. தர்மராஜ், பேரா. தே. ஞானசேகரன், ஸ்பார்க் குமார் கருத்துக்களின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகின்றது.

## தலித் இலக்கிய விமர்சனங்கள்

அட்டவணைச் சாதிகளில் வரக்கூடிய படைப்புகளை எல்லாம் தலித் படைப்புகள், தலித் படைப்பாளர்கள் என்று தலித்தியவாதிகள் அடையாளப்படுத்தும் போது, அதற்கு நேர் எதிரான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டது.

‘அஞ்ஞாடி’ என்ற புதினம் மூலம் சாகித்திய அகடமி விருது பெற்ற கரிசல் இலக்கிய படைப்பாளியான பூமணி அவர்களின் இலக்கிய படைப்புக்களை ‘தலித் இலக்கியம் ’ என்ற வரையறைக்குள் கொண்டு வர தலித் இலக்கியவாதிகள் முயற்சி செய்யும் பொழுது, நான் ஒரு தமிழ் இலக்கிய படைப்பாளி என்னுடைய படைப்புக்களை யாரும் தலித்தியத்திற்கு கொண்டு வரக்கூடாது. ‘தலித்தியம் என்பது ஒரு பம்மாத்து வேலை’ என்பதாக எழுத்தாளர் பூமணி அவர்கள் தலித் இலக்கியத்திற்கு எதிரான எதிர்வினை ஆற்றியதை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

## தலித் இலக்கியத்தின் வாழ்வியல் கூறுகள்

தலித் இலக்கியம் முன் வைக்கும் வாழ்வியல் கூறுகளான உணவு, இருப்பிடம், கலை, இசை, பண்பாடு என்று பதிவு செய்யப்படும் அனைத்தும் ஆதித்திராவிடர்களின் வாழ்வியல் கூறுகளையே முன் நிறுத்தப்படுகின்றதை தலித் இலக்கியத்தின் ஊடாக நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

‘தலித் உணவு என்று முன் வைக்கப்பட்டதும் தலித் இசை என்று எடுத்துக் கொள்ளப்பட்டதும், தலித் இலக்கியம், என்று பதிவு செய்யப்பட்டதும் ஆதித்திராவிடர் பெரும்பாலும் பிரதிநிதித்துவப்படுத்தியதை விரைவாக விளங்கிக் கொண்ட பிற பட்டியலினச்சாதிகள் குறிப்பாக, தேவேந்திரர்களும், அருந்ததியர்களும் அதிருப்திகளை வெளிப்படுத்தினார்கள்”3 என்று பேரா. டி தர்மராஜ் கூறுகிறார்.

மேலும் அவர் கூறும் போது, ‘தலித் உணவு என்று சொல்லப்பட்ட மாட்டு மாமிசம் தங்களால் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், தலித் இசை என முன்வைக்கப்பட்ட பறை எங்களுடையது அல்ல என்றும், தமிழில் செய்யப்பட்டத் தலித் இலக்கியங்கள் தேவேந்திரர்களைப் பதிவு செய்யவில்லை என்று வாதிட்ட இம்மக்கள் ‘தலித்’ என்ற அரசியல் அரங்கினுள் வர பிரியப்படாததை வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தியிருந்தனர்”4 இவ்வாறாகத் தலித் இலக்கியம் என்றால் அது ஆதித்திராவிடர்களுக்கான இலக்கியமாக கட்டமைக்கப்பட்டதை அறிய முடிகின்றது.

பேரா.டி.தர்மராஜ் அவர்களின் கருத்துக்களுக்கு வலு சேர்க்கும் விதமாக, டாக்டர் குருசாமி சித்தரின் கருத்தை இங்ஙனம் நோக்கும் போது ‘தமிழ்நாட்டில் பறையர்கள் பண்பாடு, கலை, இலக்கியத்தைச் சொல்லி இது தலித் பண்பாடு, தலித் கலை, தலித் இலக்கியம்“ என்றும் பறையர்களால் பறை இலக்கியம் தோன்றியதாக 5 குருசாமி சித்தர் கூறுவதில் இருந்து அறிய முடிகின்றது.

மதுரையில் ‘ஸ்பார்க்’ என்ற தொண்டு நிறுவன மூலம் பட்டியலின மக்களிடையே சமூக, பொருளாதார விடுதலையை முன்னெடுத்து வரும் ஸ்பார்க் குமார் தலித் இலக்கியம் பற்றி கூறும்பொழுது, ‘சாதிய இழிவுகளை போக்க வந்த ஆயுதமாக ‘தலித்’ என்கிற சொல்லை முன்னிறுத்திய தலித்தியவாதிகள், இன்று தலித் என்கிற சொல்லையே ஒரு இழிவான சாதியாக மாற்றியிருப்பது வேடிக்கை! வேதனை! இவ்வுலகில் இந்த தேசத்தில் ஒருவர் மனிதராய், இந்தியராய், தமிழராய், தெலுங்கராய், மலையாளியாய் இருக்கலாம். ஏன் ஏதாவதொரு சாதி அடையாளத்தோடுக்கூட இருக்கலாம். ஆனால் ‘ஹரிஜனாக’ **“SC”** -யாக தலித்தாக இருக்க முடியாது, இருக்க கூடாது” 6 என்று கூறுகிறார்.

தலித்தியம் என்பதை சாதியமாக்குவதில் பெரும் பங்கு வகித்தவர்கள் அ. மார்க்ஸ், ரவிக்குமார், ராஜ்கௌதமன், சிவகாமி என்பவரை நாம் குறிப்பிடலாம். இந்தியா முழுமைக்கும் ஒடுக்கப்பட்டோரை ஓரணியில் ஒன்று திரட்டும் நோக்கில் ஒரு இயக்கமாக, இலக்கியமாக உருவாக்கப்பட்ட சொல், தமிழகச் சூழலில் தலித், தலித் இயக்கம், தலித் இலக்கியம் என்பது பட்டியலின மக்களுக்கானது என்றும், மேலும் அச்சொல்லை தனதாக்கி கொள்ளும் முயற்சியில் ஆதிதிராவிடர்கள் ஈடுபடுவதை நாம் அறிய முடிகின்றது.

‘தலித் அரசியல் என்பது ஒரு சில சாதிகளுக்கான அரசியல் என்பதில் இருந்து விலகி ஆதிக்கச் சாதிகளுக்கு எதிராக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அரசியல் என்பதாக விரிவுப்படுத்தப்பட வேண்டும். அதை விடுத்து தலித்

அரசியல் என்றால் அரிசன அரசியல் என்று சுருக்கிவிடக் கூடாது”7 என்று பேரா. தே. ஞான சேகரன் கூறுவார்.

## இறுதியாக

பாரத தேசம் முழுவதும் ஒடுக்கப்பட்டோரின் ஒட்டுமொத்த விடுதலைக்கான கருவியாக உருவாக்கப்பட்ட தலித், தலித் இயக்கம், தலித் இலக்கியம், தலித் அரசியல், தலித் இலக்கியம் தமிழகத்தில் ஆரம்பகாலத்தில் பட்டியலின மக்களுக்கான சொல்லாக மாறியதும், பின் அது பட்டியலின மக்களில் ஒரு சாதியினருக்கானதாக உருமாறிய செய்திகளையும் காணமுடிகின்றது. மேலும் இவ்வாறான போக்கு பட்டியலின, ஒடுக்கப்பட்ட மக்களிடையே முரண்பாடுகளை அதிகரிக்க செய்யும் என்று தென்மாவட்ட இலக்கியப்படைப்பாளர்கள், திறனாய்வாளர்களின் கருத்துக்களை இக்கட்டுரை வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. டி. தர்மராஜ் - நவீன தமிழ்ச் சூழலில் தலித் எழுத்து அரசியல் செப் 2009- ப.32
2. தே. ஞானசேகரன் -தலித் என்ற சொல்லும் தமிழ்ச் சூழலும் பக் 17
3. டி. தர்மராஜ் - நவீன தமிழிச் சூழலில் தலித் எழுத்து அரசியல் புதுவிசை இதழ் ஜீலை - செப் 2009 பக். 39
4. மேலது
5. தே. ஞானசேகரன் - தலித் என்ற சொல்லும் தமிழ்ச் சூழலும் பக்.97
6. ஸ்பார்க் மாரிக்குமார் தலித் என்கிற அடையாளம் யாருக்கு வாழ்வளிக்கிறது? யார் வாழ்வை அழிக்கிறது பக்.25
7. தே. ஞானசேகரன் - தலித் என்ற சொல்லும் தமிழ்ச் சூழலும் பக்.114 மேற்கோள் நூல்கள் :
8. புது விசை செப் - 2009
9. தலித் என்ற சொல்லும் தமிழ்ச் சூழலும் டாக்டர் தே. ஞானசேகரன் தேவேந்திர தன்னார்வ அறக்கட்டளை மதுரை 625 020.

© 2026 இம்மானுவேல் செ, முனைவர் கலாகோபி க. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..